

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விளவங்கோடு வட்டம், தூத்தூர் கடலோர பகுதிகளை சார்ந்த மீனவர்கள் பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் எல்லைக்கு (BIOT) உட்பட்ட டீகோ கார்சியா தீவின் அருகில் மீன்பிடிப்பதை முழுமையாக நிறுத்திடல் குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (29.07.2016) நடைபெற்றது. மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு. வே. லாமேக் ஜெயக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 484/2016 நாள்: 29.07.2016

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

கன்னியாகுமரி மாவட்ட மீன்பிடி விசைப்படகுகள் இந்திய தனி பொருளாதார மண்டலம் (Exclusive Economic Zone) மற்றும் சர்வதேச கடல் எல்லையை (International Maritime Boundary Line) தாண்டி பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் எல்லை பகுதிக்குட்பட்ட (British Indian Ocean Territory) டீகோ கார்சியா (Diego Garcia) மற்றும் செய்செலிஸ் தீவு (SEYCHELLES) பகுதிகளில் மீன்பிடிப்பதை முழுமையாக நிறுத்திடல் குறித்த விழிப்புணர்வு கூட்டம் 29.07.2016 அன்று மாலை 3.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட மீன்பிடி விசைப்படகுகள் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டம் 1983-யை மீறி சர்வதேச கடல் எல்லையை தாண்டி பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் எல்லைப் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடுவது குறித்து இந்திய பெருங்கடல் சூரை மீன் ஆணையம் (IOTC) போன்ற சர்வதேச கண்காணிப்பு நிறுவனத்தினால் கண்காணிக்கப்படுவது குறித்து இக்கூட்டத்தில் பேசப்பட்டது. இந்திய பெருங்கடல் சூரை மீன் ஆணையத்தினால் மேற்காணும் மீன்பிடிப்பு சட்ட விரோதமான, ஒழுங்குமுறையற்ற மற்றும் முறைப்படுத்தப்படாத மீன்பிடிப்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இச்செயலில் வெளிநாடுகளுக்கு இந்திய கடல் மீன் ஏற்றுமதி பாதிக்கப்படுவதுடன், ஏற்றுமதி தடைக்கு வழிகோலும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 13.04.2016 அன்றும் 13.06.2016 அன்றும் நடத்தப்பட்டுள்ளது. மேலும் 23.06.2016 அன்று இந்திய பெருங்கடல் எல்லைக்குட்பட்ட டீகோ கார்சியா தீவில் மீன்பிடி தொழில் செய்வதை தடுக்கும் பொருட்டு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக கூட்டுக்குழு கூட்டம் நடத்தப்பட்டது. 29.07.2016 அன்றுடன் மேற்கு கடற்கரை மீன்பிடித்தடைக்காலம் முடிவடைவதால் மீன்துறை ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு கூட்டத்தில் 23.06.2016 அன்று வெளியுறவுத்துறை அமைச்சக குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தெரிவிக்கப்பட்டது.

- பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் தீவுப்பகுதியான டீகோ கார்சியா தீவில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் படகுகள் தொழில் முடக்கம் செய்யப்பட்டு ரூ.1,50,000/- மட்டும் அபராத தொகை விதிக்கப்படும். வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் அபராத தொகை செலுத்த தவறும் பட்சத்தில் அபராத தொகையானது உயர்த்தப்படும். இவ்வாறு உயர்த்தப்பட்ட அபராத தொகையை செலுத்திய பின்னரே மீன்பிடி விசைப்படகுகளுக்கு தொழில் புரிய அனுமதி வழங்கப்படும்.
- டீகோ கார்சியா தீவு பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் பயோ மெட்ரிக் மீனவர் அடையாள அட்டை ரத்து செய்யப்படும்.
- இப்பகுதியில் தொடர்ந்து மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் படகுகளின் பதிவு மற்றும் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும்.

- இவ்வாறு தடையை மீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், மானிய உதவித்தொகை மற்றும் மீனவர் நலவாரிய நிதி பயன்களும் நிறுத்தப்படும்.
- இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடி தொழிலில் ஈடுபடும் படகுகள் இந்திய கடலோர காவல் படை மூலம் கண்காணிக்கப்பட்டு துறை ரீதியாக சட்டபூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் விவரம்.**

1. திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான்,இ.ஆ.ப - மாவட்ட ஆட்சித்தலைவர்/கூட்டத்தின் தலைவர்.
2. திரு. வே. லாமேக் ஜெயகுமார், - மீன்துறை துணை இயக்குநர், (மண்டலம்) கன்னியாகுமரி.
3. திரு. வெங்கட்ராமன் - காவல் துணை கண்காணிப்பாளர், குளச்சல்
4. திரு. சி. ரூபர்ட்ஜோதி - மீன்துறை உதவி இயக்குநர், நாகர்கோவில்.
5. திரு. ஜெ.நாபிராஜ் - மீன்துறை உதவி இயக்குநர், குளச்சல்.
6. திருமதி.ீலா - தாசில்தார், விளவங்கோடு.
7. குச.சர்ச்சில் - தெற்காசிய மீனவர் தோழமை.
8. மீனவர் கூட்டுறவு சங்க தலைவர்கள் - இரையுமன்துறை முதல் நீரோடி வரை 8 மீனவ கிராமங்கள்
9. பஞ்சாயத்து தலைவர் - தூத்தூர்.
10. விசைப்படகு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

மீன்துறை துணை இயக்குநர்,
(மண்டலம்) கன்னியாகுமரி,
(இருப்பு) நாகர்கோவில்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**